**தலைப்பு 101 – புத்தசாசன அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் 2017 ஆம் ஆண்டிற்கான அறிக்கை**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது பட்டோலையிலும் இரண்டாவது பட்டோலையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்பு மற்றும் விடய இலக்கத்தின் கீழ் ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக்கூற்று என்பன புத்தசாசன அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலும் இணைக்கக்கூற்றுக்களிலும் காட்டப்பட்டுள்ள நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

## 1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களிதன்மை தொடர்பான பொறுப்பு

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 இன் பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளையும் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரம் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளார். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.3 கணக்காய்வில் நோக்கெல்லை

---

தலைப்பு 101 – புத்தசாசன அமைச்சின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு தரப்பினருக்கு இடையே செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக புத்தசாசன அமைச்சில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.3 ஆம் பந்தி முதல் 2.10 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 127 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிப் பொறுப்பை நிறைவேற்றுகையில் வெளிப்படுத்தப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிதகைமையை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளமை அவதானிக்கப்பட்டது.

| நிதிப்பிரமாணம் | நிதிப்பிரமாணம் 127 இன் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களிதகைமை | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் இந்த ஒழுங்குவிதிகளுடன் இணங்கி நடக்காமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்திக்கான தொடர்பு |
|---|---|---|---|---|
| 127(1)(ஆ) | செலவினம் மற்றும் அரச வருமான சேகரிப்பு தொடர்பாக போதியளவு கட்டுப்பாட்டிற்கும் ஏற்பாடுகள் தயாரிக்கும் தாப்பிக்கும் முறையொன்று தயாரித்துக் கொள்ளப்படல் வேண்டும். | 1. | முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள் | 2.3 |
| | | 2. | முகாமைத்துவ குறைபாடுகள் | 2.5 |
| | | 3. | தீர்க்கப்பட்டிராத கணக்காய்வு பந்திகள் | 2.4 |
| | | 4. | இணங்காமைகள் | 2.9 |
| | | 5. | மனிதவள முகாமைத்துவத்திலான குறைபாடுகள் | 2.10 |
| 127(3) | ஐயத்திற்குரிய அல்லது சிக்கலான விடயங்கள் அனைத்தையும் தமது சொந்த நிர்வாக அனுபவத்தையும் தீர்மானத்தையும் அதில் பிரயோகிப்பதற்காக அவருக்கு வழங்கப்படுகின்றதெனவும் | 1. | ஏனைய நிறுவனங்களுக்கு சொந்தமான சொத்துக்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்துதல் | 2.2(இ) |
| | | 2. | கையேற்கப்படாத சொத்துக்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்தல் | 2.2(ஈ) |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 3. | பொது மக்களுக்கான சேவையை நிறைவேற்றுவதிலான குறைபாடுகள் | 2.5(உ) |
| | | 4. | சொத்துக்களை பதிவேட்டிற்கு உட்படுத்தாமை | 2.2(அ) |
| | | 5. | எரிபொருள் எரிவுப் பரிசோதனையை மேற்கொள்ளாமை | 2.2(ஆ) |
| 127(4) | தமது ஒவ்வொரு கணக்கீட்டு உத்தியோகத்தரல் ஒதுக்கீட்டுக் கணக்குகள் முறையாக சமர்ப்பிக்கப்படுவதாகவும் தாம் அனுப்பி கையொப்பமிடுவதற்கு முன்னர் அமைச்சின் போது பரீட்சிக்கப்பட்டதெனவும் அவ்வாறே மதிப்பீடுகளில் நிதி ஏற்பாடு மற்றும் உள்ளவாறான செலவினத்திற்கு இடையே காணப்படும் கருத்திற் கொள்ளக் கூடியளவு வேறுபாடு தம்மால் அழுத்தமாக புலனாய்விற்கு உட்படுத்தப்படல். | 1. | பொது வைப்புக் கணக்கிலான குறைபாடுகள் | 2.7 |
| | | 2. | வங்கிக் கணக்குகளை நடைமுறைப்படுத்துவதிலான குறைபாடுகள் | 2.8 |
| 127(5) | திணைக்களத்தின் மதிப்பீடுகளில் நிதிஏற்பாடு மற்றும் செலவினத்திற்கு இடையே உள்ள கருத்திற் கொள்ளக் கூடியளவு வேறுபாடு அமைச்சினால் நுட்பமாக புலனாய்விற்கு உட்படுத்தப்பட்டதாகவும் | 1. | ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாடு பயன்படுத்தப்படாமை | 2.6(i) |
| | | 2. | மிகை நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தமை | 2.6(ii) |
| | | 3. | குறைநிரப்பு மதிப்பிடுகளை ஒதுக்கீடு செய்வதனூடாக பெற்றுக்கொள்ளப்பட்ட நிதியேற்பாட்டினை பயன்படுத்துவதிலான குறைபாடுகள் | 2.6(iii) |

## 2. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 பெறுகை நடைமுறையினூடாக வழங்கல் மற்றும் சேவைகளை பெற்றுக்கொள்ளல்

அமைச்சினால் அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக்கமைய செயற்பட்டவாறு வழங்கல் மற்றும் சேவைகளை பெற்றுக்கொள்ள வேண்டியப ரூபா 29.46 மில்லியன் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அவற்றுள் ரூபா 28.88 மில்லியன் நிதியேற்பாடு பயன்படுத்தப்பட்டிருந்தது.

### 2.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) வாகனங்கள் பதிவேடுகளுக்கு உட்படுத்தப்படாமை**

அமைச்சின் கீழ் காணப்படும் குருன்தன்குளம் ரஜட்ட சுற்றுலா விடுதி மற்றும் அது அமைந்துள்ள காணிகளை மதிப்பீடு செய்து நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்திக்கமைய அனைத்து எரிபொருள் பரிசோதனைக்கும் பின்னர் 12 மாத காலப்பகுதியில் அல்லது 25000 கிலோ மீட்டர்கள் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டதன் பின்னர் அல்லது என்ஜினுடன் தொடர்புடைய பிரதானமானதொரு பழுதுபார்த்தலின் பின்னர் ஆகிய காரணங்களில் முதலில் ஏற்படும் சந்தர்ப்பத்தின் பின்னர் மீண்டும் எரிபொருள் பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், அமைச்சின் வாகனங்களுக்கான எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(இ) ஏனைய நிறுவனங்களுக்கு சொந்தமான சொத்துக்களை முறையற்ற ரீதியில் பயன்படுத்தல்**

நிலைபேறான அபிவிருத்தி வனசீவராசிகள் அமைச்சின் வாகனமொன்று உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி, கடற்றொழில் மற்றும் வீடமைப்பு அமைச்சிற்கு சொந்தமான வாகனமொன்றும் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் 2 வாகனங்கள் எனுமாறு 4 வாகனங்கள் புத்தசாசன அமைச்சினால் பயன்படுத்தப்படுவதுடன், இந்த வாகனம் அமைச்சிற்கு கையேற்கப்பட்டிருக்கவில்லை. அவற்றுள் ஒரு வாகனம் ஓட்டத்தில் ஈடுபடுத்த முடியாத நிலையில் காணப்பட்டது.

**(ஈ) கையேற்கப்படாத சொத்துக்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்தல்**

கமநல சேவைகள் திணைக்களத்திற்குரிய காணியொன்றில் அமைச்சினால் 2012 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையிலும் ரூபா 32 மில்லியன் செலவிடப்பட்டு தஹாம் பாடசாலைக் கட்டிடமொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும், இந்த காணி 2018 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரையிலும் கையேற்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறு நிர்மாணிக்கப்பட்ட கட்டிடத்தின் சாவிகள் அமைச்சு அல்லது குறித்த தஹாம் பாடசாலைக்கு சொந்தமாக இல்லாதிருந்தமையால் கட்டிடம் முறையற்ற பாவனைக்கு உட்பட்டிருந்தது.

## 2.3 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்ற விதத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அவதானிக்கப்பட்ட அவ்வாறான சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

**சங்கைக்குரிய மஹாநாயக்க தேரர்களுக்கு வாகனங்களை வழங்குதல்**

2017 ஆம் ஆண்டின் போது நிதி அமைச்சினால் கையேற்கப்பட்ட நான்கு வாகனங்கள், புத்தசாசன அமைச்சின் பெயரில் பதிவு செய்யப்பட்டு சங்கைக்குரிய மகாநாயக்க தேரர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. எனினும், அதற்கு மேலதிகமாக அது வரையிலும் கொள்வனவு செய்யப்பட்டிருந்த வாகனமொன்றிற்காக மதகுரு ஒருவருக்கு ரூபா 25 மில்லியன் பணம் வழங்கப்பட்டிருந்த போதிலும், அந்த குறித்த வாகனம் அமைச்சின் பெயரில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 2.4 தீர்க்கப்பட்டிராத கணக்காய்வு பந்திகள்

அமைச்சிற்குரிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருந்த கணக்காய்வு பந்திகளில் சுட்டிக்காண்பிக்கப்பட்டிருந்த குறைபாடுகள் தொடர்பில் திணைக்களத்தினால் திருத்தப்பட்டிராத பந்திகளுக்கான தொடர்பு பின்வருமாறு.

| | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான தொடர்பு | | தொடர்புடைய விடயம் |
|---|---|---|---|
| | ஆண்டு | பந்தி இலக்கம் | |
| (அ) | 2016 | 3.7(ஆ) | 2016 ஆம் ஆண்டின் அரச வெசாக் விழாவினை நடாத்துவதற்காக நயிகல ரஜமஹா விகாரையில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 14,608,026 தொகையான பழுதுபார்த்தல்களுக்காக உரிய வேலை அறிக்கைகள் இல்லாதிருந்ததுடன், செலவினங்கள் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2015 | 3.9.1(அ) | 2015 ஆம் ஆண்டின் தேசிய வெசாக் விழாவையொட்டி ''பொது பெதி கீதய'' இன் நிர்மாணத்திற்காக ரூபா ஒரு மில்லியன் செலுத்தப்பட்டிருந்த போதிலும், அந்த நிர்மாண நடவடிக்கைகள் இதுவரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2015 | 3.9.1(ஆ) | 2015 ஆம் ஆண்டிற்காக பௌத்த கலாசார பெறுமதி மற்றும் அதனுடன் தொடர்புடைய கண்காட்சிகளை நடாத்துவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 2,250,000 தொகையான மொத்த நிதியேற்பாடும் அங்கீகாரமொன்று இல்லாது பொதுநாட்குறிப்பு புத்தகங்களை அச்சிடுவதற்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தது. |
| (ஈ) | 2015 | 3.10.2 | அமைச்சு மற்றும் முன்னாள் அமைச்சின் கீழான 05 திணைக்களங்களுக்காக வலைத்தளமொன்றை நிர்மாணிப்பதற்காக 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 3,807,000 கூட்டுத்தொகை செலுத்தப்பட்டிருந்தது. அமைச்சின் கீழான 5 திணைக்களங்களுக்கு வலைத்தளங்களை |

| | | | |
|---|---|---|---|
| | | | நிர்மாணிப்பதற்காக ரூபா 3,003,000 செலுத்தப்பட்டிருந்த போதிலும், அந்த திணைக்களங்களுக்கான வலைத்தளங்கள் நிர்மாணிக்கப்பட்டு கையளிக்கப்பட்டிருந்தது. |
| (உ) | 2015 | 3.11.3 | 2014 ஆம் ஆண்டிற்காக நடாத்தப்பட்ட ஸ்ரீமத் அநாகரிக தர்மபால அவர்களின் பிறந்தநாளையொட்டி விழாவொன்றினை கொண்டாடுதல் மற்றும் பௌத்த கலாசார விழாவிற்காக அகில இலங்கை பௌத்த மஹா சம்மேளத்தினால் முன்வைக்கப்பட்டிருந்த ரூபா 3,189,858 தொகையான செலவின அறிக்கையொன்றுக்காக ரூபா 2,000,000 தொகையான பணம் புத்தசாசன அமைச்சினால் செலுத்தப்பட்டிருந்தது. உரிய முறையில் ரூபா 1,561,264 தொகையான செலவினத்திற்காக பட்டியல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், ரூபா 438,736 தொகையான செலவினங்களுக்காக பட்டியல்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | 2015 | 3.12.1 | அனுராதபுரம் மிரிஸ்ஸவெட்டிய மஹா விகாரையின் மதகுருமார் பயிற்சி நிலையத்தைச் சுற்றிலும் மதிலை நிர்மாணிப்பதற்காக ரூபா 2,640,792 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், பணியை ஆரம்பிப்பதற்கு முன்னர் அமைச்சினால் நிலத்தின் உரித்து தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிராமையால் இந்த பணி இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்தது. |

## 2.5 முகாமைத்துவ நலிவுகள்

கணக்காய்வு தெரிவு பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

### (அ) ஐக்கிய நாடுகளின் சர்வதேச வெசாக் தின கொண்டாட்டம் - ஊடக பிரச்சார நடவடிக்கைகள்

ஐக்கிய நாடுகளின் சர்வதேச வெசாக் தின கொண்டாட்டத்தின் ஊடக விளம்பரம்படுத்தல் பணிகளுக்காக வெகுசன ஊடக அமைச்சினால் திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருந்தன. அதற்காக நிதியேற்பாடு மேற்கொள்ளல் புத்தசாசன அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், ரூபா 20 மில்லியன் இந்த அமைச்சினால் செலசினே ரூபாவாஹினி நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது. செலசினே நிறுவனத்தினால் மேலதிகமாக பணியாற்றியதாக குறிப்பிட்டு ரூபா 20 மில்லியனுக்கு மேலதிகமாக மேலும் ரூபா 6,985,024 தொகை கோரப்பட்டிருந்தமையால் குறித்த ஊடக விளம்ப பணிகளை மேற்பார்வை செய்யும் குழுவான்று அமைச்சு மட்டத்தில் சர்வதேச வெசாக் தின விழா நிறைவடைந்ததன் பின்னர் அல்லது 2017 மே 25 ஆந் திகதி நியமிக்கப்பட்டிருந்ததுடன், அந்த குழுவினால் ரூபா 20 மில்லியனுக்கு மேற்கொள்ளப்பட்ட பணிகள் தொடர்பான மீளாய்வொன்று அல்லது ஊடக பிரச்சார பணிகளின் செயல்முன்னேற்றம் தொடர்பான அறிக்கையொன்றேனும் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

### (ஆ) கபில வஸ்துபுர சாக்ய ஜனபத மீள் நிர்மாணித்தல்

2016 செப்தெம்பர் 05 ஆந் திகதிய அமப/16/1733/730/009 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைய புத்தசாசன அமைச்சிற்கு கையளிக்கப்பட்டிருந்த சமரக்கோன் பூதலுக்குரிய 77 ஏக்கர்கள் பரப்புடைய நிலப்பிரதேசத்துடனான பிலியந்தவ, கஹாபொலவில் அமைந்துள்ள ரெஜிடேல் வத்த காணியில் கபில வன்துபுர சக்ய ஜனபதயின் மீள் நிர்மாணத்திற்கான செயற்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இந்த

செயற்திட்டம் தொடர்பில் புத்தசாசன அமைச்சினால் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சினூடாக எழுத்துமூலம் நேபாள அரசிற்கு அறிவித்து இணக்கப்பாட்டினை பெற்றிராததுடன், சாக்ய ஜனபத மீள்நிர்மாணத்திற்காக 2017 மார்ச் மாதம் 03 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும், 2018 பெப்ரவரி 21 ஆந் திகதி வரையிலும் செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) பின்தங்கிய விகாரைகளை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டம்**

20 மாவட்டங்களின் பின்தங்கிய விகாரைகளை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் உதவு தொகைகளாக ரூபா 76,712,741 வழங்கப்பட்டிருந்தது. குழு அறிக்கை பரிந்துரை செய்யப்பட்டிராத 213 விகாரைகளுக்காக உதவிகள் வழங்கப்பட்டிருந்ததுடன், 17 மாவட்டங்களின் 204 விகாரைகளுக்காக சாத்தியவளக் கற்கையினை அடிப்படையாகக் கொண்டிராது உதவிகள் வழங்கப்பட்டிருந்தன. 5 மாவட்டங்களினதும், ஆகக் குறைந்த புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட 9 விகாரைகளுக்காக உதவிகள் வழங்கப்பட்டிருந்த போதிலும், ஆகக்கூடிய புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட 16 மாவட்டங்களின் 81 விகாரைகளுக்கான உதவிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) அரச வெசாக் விழா – 2017**

வட்டாரம ஸ்ரீ மரியதேவ விகாரையின் தர்ம போதனை மண்டபத்தை நிர்மாணிப்பதற்காக 2016 மற்றும் 2017 ஆகிய வருடங்களினுள் 4 சந்தர்ப்பங்களில் 4 கட்டங்களுக்காக ரூபா 20 மில்லியன் வழங்கப்பட்டிருந்தது. இந்த ரூபா 20 மில்லியனுக்காக பௌதீக திட்டமிடல் திணைக்களத்தினால் பின்பற்றப்பட வேண்டிய மதிப்பீடுகள், செய்வேலை அறிக்கை, வழங்கிய நிதியேற்பாடுகளின் செயன்முன்னேற்ற அறிக்கை ஆகியன கணக்காய்விற்காக முன்வைக்கப்படாததுடன், இராணவத்தினால் மேற்கொள்ளப்பட்ட இந்த நிர்மாணத்திற்குரிய பணிகள் தொடர்பில் அமைச்சினால் பின்தொடர் நடவடிக்கையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(உ) பொது மக்களுக்கான சேவைகளை நிறைவேற்றல்**

2008 பெப்ரவரி 06 ஆந் திகதிய 05/2008 மற்றும் 2018 சனவரி 24 ஆந் திகதிய 05/2008(I) ஆம் இலக்க அரச நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் சுற்றறிக்கைக்கமைய அனைத்து அரச நிறுவனங்களினதும் பிரசைகள் நியதிச்சட்டம் தயாரித்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும். எனினும் அமைச்சினால் பிரசைகள் நியதிச் சட்டம் நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.6 கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டை பயன்படுத்துதல்**

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த 05 ஆண்டுகள் காலத்தில் அமைச்சிற்கு வழங்கப்பட்டுள்ள நிதி ஏற்பாடு, பயன்பாடு, சேமிப்பு என்பன தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள் கீழே தரப்படுகின்றன.

| ஆண்டு | செலவு வகை | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| 2013 | மீண்டுவருபவை | 121.74 | 118.25 | 3.50 | 2.87 |
| | மூலதனம் | 551.55 | 484.96 | 66.59 | 12.07 |
| | மொத்தம் | **673.29** | **603.20** | **70.09** | **10.41** |
| 2014 | மீண்டுவருபவை | 170.27 | 169.06 | 1.21 | 0.71 |
| | மூலதனம் | 494.86 | 485.87 | 8.99 | 1.81 |
| | மொத்தம் | **665.14** | **654.94** | **10.20** | **1.5** |
| 2015 | மீண்டுவருபவை | 179.51 | 159.25 | 20.26 | 11.3 |
| | மூலதனம் | 652.77 | 640.48 | 12.30 | 1.9 |
| | மொத்தம் | **832.28** | **799.73** | **32.55** | **3.9** |
| 2016 | மீண்டுவருபவை | 175.02 | 162.73 | 12.29 | 7 |
| | மூலதனம் | 726.60 | 708.99 | 17.61 | 2 |
| | மொத்தம் | **901.62** | **871.72** | **29.90** | **3** |
| 2017 | மீண்டுவருபவை | 130.05 | 127.51 | 2.54 | 1.95 |
| | மூலதனம் | 36.44 | 30.72 | 5.71 | 15.66 |
| | மொத்தம் | **166.49** | **158.23** | **8.260** | **5** |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(i) ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதி பயன்படுத்தப்படாமை**

02 செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 125 மில்லியன் தொகையான மொத்த தேறிய நிதியேற்பாட்டில் எவ்வித பயன்பாடும் மேற்கொள்ளப்படாது முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தது.

**(ii) மிகை நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தமை**

மீளாய்வாண்டினுள் 08 மீண்டெழும் மற்றும் மூலதன செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 679,444,780 தொகையான நிதியேற்பாட்டில் 40 சதவீதம் முதல் 100 சதவீதத் வரையான வீச்சிற்குரிய ரூபா 354,327,370 கூட்டுத்தொகை சேமிக்கப்பட்டிருந்தது.

**(iii) குறைநிரப்பு மதிப்பீடுகளின் ஒதுக்கீடுகள் மூலம் நிதியேற்பாடு மேற்கொள்ளல்**

4 செலவின விடயங்களுக்காக குறைநிரப்பு மதிப்பீடுகளின் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 241,333,586 தொகையான நிதியேற்பாடானது ஆண்டினுள் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. அவற்றுள் 3 செலவின விடயங்களின் குறைநிரப்பு நிதியேற்பாட்டினை விஞ்சிய சேமிப்புக்கள் அவதானிக்கப்பட்டன.

**2.7 பொது வைப்புக் கணக்கு**

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பொது வைப்புக் கணக்கின் ரூபா 56,938,563 தொகையாக இருந்ததுடன், 2 வருடங்களை விஞ்சிய ரூபா 2,256,324 கூட்டுத்தொகையான 05 வைப்புக்கள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை.

**2.8 வங்கி கணக்குகளை நடைமுறைப்படுத்தல்**

**சீராக்கப்பட வேண்டிய மீதிகள்**

அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த 2017 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் வங்கி இணக்கக்கூற்றின் பிரகாரம் வழங்கப்பட்ட போதிலும், வங்கிக்கு சமர்ப்பிக்கப்பட்டிராத ரூபா 104,207 கூட்டுப்பெறுமதியான 17 காசோலைகள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 396(ஈ) இன் பிரகாரம் பங்களிப்பாளரை வினவி அரச வருமானத்திற்கு எடுப்பதற்கு அல்லது புதிய காசோலையொன்றினை வழங்க வேண்டிய போதிலும், அதன் பிரகாரம் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**2.9 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 66(2)(அ) இன் பிரகாரம் ஏதேனுமொரு நிகழ்ச்சித்திட்டமொன்றின் மூலதன செலவின தொகுதியை, அதற்கு புறம்பாக மாற்றப்படாத போதிலும், அதற்கு முரணாக பூஜை பூமியில் அபிவிருத்தியின் கீழ் ஒதுக்கப்பட்ட ரூபா 3,659,932 தொகையான மூலதன நிதியேற்பாடு அங்கீகாரமின்றி விகாரையின் செயலாற்றல் குறிகாட்டிகளை அச்சிடுவதற்காக அரச அச்சகத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. விகாரைக்குரிய பணிக் குறிகாட்டிகளுக்காக வருடாந்த மதிப்பீடுகளினூடாக நிதியேற்பாடுகள் ஒதுக்கப்பட்டிராத நிலைமையின் கீ இந்த கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**2.10 மனிதவள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர், உள்ளபடியான பதவியணியினர் மற்றும் ஆளணி வேதனங்களுக்கான செலவு**

அமைச்சின் கடமைகளை நிறைவேற்றுவதற்காக 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட உள்ளபடியான வெற்றிடமான மற்றும் மிகையான பதவியணியினர் தொடர்பான விபரம் கீழே தரப்பட்டுகின்றன. மீளாய்வாண்டிற்காக அமைச்சினால் ஆளணி வேதன செலவுத் தொகுதி தொடர்பாக ரூபா 16 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க ஒரு நபருக்கான செலவு ரூபா 124,031 ஆக இருந்தது.

| | ஆளணி வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 14 | 12 | 02 |
| (ii) | மூன்றாம் மட்டம் | 02 | 01 | 01 |
| (iii) | இரண்டாம் மட்டம் | 139 | 82 | 57 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 46 | 26 | 20 |
| (v) | அமைய / ஒப்பந்தம் | 8 | 8 | - |
| | மொத்தம் | 209 | 129 | 80 |

மீளாய்வாண்டின் இறுதியளவில் 80 வெற்றிடங்கள் நிலவியதுடன், அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்காக அல்லது தேவைக்கேற்ப பதவியணியை மாற்றியமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.